1978 செப்டம்பர் 1]

நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் கூத்தக்குடி சண்முகம் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். இருக்கிற நிலைமைகளை அனுசரித்துத்தான் அரசு இந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

திரு. ப. சந்திரன்: தலைவரவர்களே, தமிழ்நாடு அரசு நிலத்தடி நீரைக் கட்டுப்படுத்த சட்டம் கொண்டு வர இருக்கிறது. அந்தச் சட்டத்தின் விளைவாக இந்தத் திட்டம் நிறைவேறாமல் போய்விடும் சூழ்நிலை ஏற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, நிலத்தடி நீர் பிரச்சனை குறித்து அமைக்கப்பட்ட அந்தக் குழு இன்னும் அதனைப் பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் சொல்கிறேன்.

செவிலிய உதவியாளர்கள்.

*வினா 36—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பயிற்சி பெற்ற செவிலிய உதவியாளர்கள் (F.N.A. & M.N.A.) இருக்கும்போது பயிற்சி பெறாதவர்களை அவ்வேலைக்கு நியமித்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த இடங்களில் பயிற்சி பெற்றவர்களை அரசு நியமிக்குமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவரவர்களே, (அ) & (ஆ): 1930 ஆம் ஆண்டு முதல் செவிலிய உதவியாளர் பணியில் நியமனம் பெற்ற பிறகு பயிற்சி பெற்றால் போதுமென்ற நிலைமை இருந்து வந்தது. 1976-க்குப் பிறகு பயிற்சி பெறாதவர்கள் நியமிக்கப்படக் கூடாது என்கிற நிலைமை உருவானது. எனவே அதற்குப் பிறகு பயிற்சி பெறாதவர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS